

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூகநலத்துறை மூலம், வரதட்சணை மற்றும் குழந்தை திருமண தடுப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கத்தினை இன்று (23.07.2016) நாகர்கோவில் இந்துக்கல்லூரியில் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

செ.வெ.எண்: 475/2016 நாள்: 23.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூகநலத்துறை மூலம், வரதட்சணை மற்றும் குழந்தை திருமண தடுப்பு சட்டம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நாகர்கோவில் இந்துக்கல்லூரியில் இன்று (23.07.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண் குழந்தைகளை பாதுகப்பதற்காகவும், பெண்களின் கல்வியை உயர்த்துவதற்காக, சமூகநலத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நாகர்கோவில் இந்து கல்லூரி மாணவிகளுக்கு வரதட்சணை தடுப்புச்சட்டம், குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம், குழந்தை திருமண தடைச்சட்டம் மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் நலன் பேணி காத்தலுக்கான சட்டம் ஆகியவற்றை குறித்து, விழிப்புணர்வு நிகழ்ச்சி, நாகர்கோவில் இந்துக்கல்லூரி கூட்டரங்கில் இன்று (23.07.2016) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்து, தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

பெண்களுக்கு ஏற்படும் வரதட்சணை கொடுமை, குடும்ப வன்முறை கொடுமை, சிறு வயதிலேயே குழந்தைகள் திருமணம் ஆகியவற்றை தடுப்பதற்கு சட்டத்தில் உள்ள விதிமுறைகளை குறித்து, சிறப்பு நன்னடத்தை அலுவலர்களால் இன்று விளக்கம் அளிக்கப்பட்டது. இதனை மாணவிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். ஏனென்றால் தங்கள் வீட்டிலேயோ, உறவினர்கள் வீட்டிலேயோ அல்லது அருகிலுள்ள வீட்டிலேயோ, வரதட்சணை கொடுமை போன்ற ஏதேனும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருந்தால், அதனை உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவு படுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தால், அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்படும் பெண்களை பாதுகாக்கப்படும்.

குறிப்பாக சிறுவயதிலேயே குழந்தைகளை திருமணம் செய்து வைப்பவர்களை, இரண்டு வருடம் சிறை தண்டனை மற்றும் ரூ. ஒரு இலட்சம் அபராதமும் விதிக்க சட்டத்தில் இடம் இருக்கிறது. மேலும் திருமணம் முடிந்து, ஏழு வருடத்திற்குள் கணவன் அல்லது மனைவி மரணமடைந்தால், அவ்வழக்கை சார் ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் அவர்கள் விசாரணைக்கு வரும்போது, பொதுமக்கள் அவர்களுக்கு சரியான தகவல்களை தெரிவு படுத்தினால் மட்டுமே, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். மேலும் பொது மக்களாகிய நாம் சட்டத்தில் உள்ள பல்வேறு விதிமுறைகளை அறிந்து, பின்பற்றி வந்தாலே, பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகளை நிச்சயமாக தடுக்க முடியும் என தெரிவித்தார்.

முன்பாக கலைச்சுடர் மணி திரு. அ. பழனியாபிள்ளை அவர்கள், வரதட்சணை குறித்த விழிப்புணர்வு பாடல்களை பாடி, விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சமூகநல அலுவலர் மற்றும் வரதட்சணை தடுப்பு அலுவலருமான திருமதி. கா. உமாமகேஸ்வரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. எஸ். குமுதா, குழந்தைகள் நல குழும தலைவர் திரு. எ.எம். அப்துல்ஹக்கீம், உதவி ஆய்வாளர் அனைத்து மகளிர் காவல்நிலையம் திருமதி. பி. சார்லெட், இந்துக்கல்லூரி முதல்வர் முனைவர் ற்றி. சிதம்பரதாணு, கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.